செய்துதரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மேலூர் பகுதி மருத்துவமனைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அந்தக் குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 326, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

326—

கால்நடை கிளை நிலையம்

***37071—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, திருக்காம்புலியூர் ஊராட்சி, மேட்டுத் திருக்காம்புலியூரில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், திருக்காம்புலியூர் ஊராட்சி, மேட்டுத் திருக்காம்புலியூரில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்கக் கேட்டிருக்கிறார்கள்.

5 கி.மீ. தூரத்திற்கு ஒரு கால்நடை மருந்தகம் இருக்க வேண்டும் என்றுதான் அரசு விதி இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மேட்டுத் திருக்காம்புலியூர் கிராமத்திற்கு அருகில் 4 கி.மீ. தூரத்திலே கிருஷ்ணராயபுரத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், 3 கி.மீ. தூரத்திலே மாயனூரில் ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதால் புதிதாகக் கால்நடை கிளை மருந்தகம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், மேற்படி கிராமத்திற்கு வரும் காலங்களில் ஒரு கால்நடை கிளை நிலையமாவது அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

முற்பகல் 11-15

திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறுக்கே முகவரி தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாயனூரில், 40 கோடி ரூபாய் திட்டத்தில் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனம் ஒன்று அமைத்துக்கொடுத்து, அத்தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையைப் பூர்த்தி செய்த வாழும் வரலாறு, வாழும் வள்ளல், வாழும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்பாதத்திற்கு நன்றி, நன்றி, நன்றி கூறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, திருக்காம்புலியூர் ஊராட்சி, மேட்டுத் திருக்காம்புலியூரில், கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியத்தில், பாகநத்தம் ஊராட்சியில்,

2014 ஆகஸ்ட் 4]

ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், 40 கிராமங்களுக்கும் மேற்பட்ட அந்தப் பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையால் அந்தப் பகுதி மக்களுடைய தேவையையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக்கொடுக்க முன்வருமா என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க கால்நடை பராமரிப்புத் துறைமூலம் ஆய்வு செய்து, அரசு விதிகளுக்குட்பட்டு இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலேயே கொடுக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்னுடைய தொகுதிக்குப் பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள திட்டங்களைத் தந்து, அதை நடத்தி முடித்த, வாழும் வரலாறு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நன்றி பாராட்டி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட, முசிறி ஒன்றியம், கோட்டாத்தூர் பகுதியில் பகுதிநேர கால்நடைக் கிளை நிலையம் இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்தப் பகுதிக்குப் புத்தனாம்பட்டியில்தான் முழுநேர கால்நடை மருந்தகம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகுதிநேர கால்நடை மருந்தகத்தை முழுநேர மருந்தகமாக மாற்றிக்கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3,000 கால்நடை அலகுகளுக்குக் குறைவாக இருந்தால்தான் பகுதிநேர மருந்தகம் அங்கே நடத்தப்பட்டுவரும். அங்கே துறை ஆய்வு செய்து, 3,000 கால்நடை அலகுகளுக்கு அதிகமாக இருக்கிறது என்று சொன்னால், அங்கே ஒரு மருந்தகம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.*

டாக்டர் ச. துரையப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் கொடைவள்ளல் எம்.ஜி.ஆர். அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி பொன்னியின் செல்வி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.*

வாசுதேவநல்லூர் தொகுதி, தென்மலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை இல்லை. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியானது விவசாயத்தைப் போலவே ஆடு மாடுகள், கால்நடைகளை வளர்க்கின்ற ஒரு பகுதி. அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையான கால்நடை மருத்துவமனையை அமைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.*

திரு. என்.எஸ்.என். நடராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், எல்லப்பாளையம் ஊராட்சி, மணல்மேடு பகுதியில், கால்நடைக் கிளை நிலையம் ஒன்றினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைத்துத் தருமா என்று தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 50 கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் அதிகமாக இருக்கும் என்றால், அந்த அடிப்படையிலே ஆய்வு செய்து, அந்தப் பகுதிக்கும் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.த. செல்லப்பாண்டியன் அவர்கள்.*

திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தலைசிறந்த முதலமைச்சர் உலகத் தமிழர்கள் போற்றும் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். தூத்துக்குடி தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், முள்ளக்காடு கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.*

திரு. து. முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளத்தூர் ஒன்றியம், கருநீலம் ஊராட்சியைச் சுற்றி 10-க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் உள்ளன. அங்கு 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. எனவே, கருநீலம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கிராமத்திலே குறிப்பிட்ட அளவிற்கு கால்நடைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கு மாவட்டக் கண்காணிப்பாளர் மூலமாக ஆய்வு செய்து, அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

2014 ஆகஸ்ட் 4]

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், காடாம்புலியூரில் கால்நடைக்கிளை நிலையம் இருக்கின்றது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறை விதிகளின்படி கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு 3 கி.மீ. தூரம் இருக்க வேண்டும், 3 ஆயிரம் கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். அதுவே வருங்காலத்தில் 5 ஆயிரம் கால்நடை அலகுகளாக உயரும்போது, கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாகும்போது, அது கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிளை நிலையம் ஆய்வு செய்யப்பட்டு, அங்கு 5 ஆயிரம் கால்நடை அலகுகள் இருக்கும் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக அங்கே நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட, கெம்மாரம்பாளையம் ஊராட்சி, மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டியிருக்கிற ஒரு ஊராட்சி. இந்தப் பகுதியில் சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். கால்நடைத் துறையால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற 3 ஆயிரம் கால்நடை அலகுகளுக்குமேல் இங்கே இருக்கின்ற காரணத்தினாலே, கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கிராமத்தையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் ஆய்வுசெய்து, அரசு விதிகளின்படி கால்நடைகளின் எண்ணிக்கை இருக்கும் என்று சொன்னால், அந்தக் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். கீரப்பாளையம் ஒன்றியம், ஒரத்தூரில் இயங்கி வரும் கால்நடை மருந்தகத்திற்கும் புவனகிரி ஒன்றியம், மேல் வளையமாதேவி ஊராட்சியில் இயங்கி வரும் கால்நடை மருந்தகத்திற்கும், கம்மாபுரம் ஒன்றியத்திலே இயங்கி வரும் குமாரமங்கலம் கால்நடை மருந்தகத்திற்கும் மருந்தகக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மருந்தகங்களையெல்லாம் ஆய்வு செய்து, அங்கு புதியதாக கட்டடம் தேவைப்படுமென்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

முற்பகல் 11-25

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக குமரலிங்கம் கால்நடை மருத்துவமனையிலிருந்து பிரித்து கால்நடைக் கிளைக் நிலையம் ஒன்று நல்லண்ணகவுண்டன்புதூர் என்ற N.G. புதூரில் அமைத்துத் தருமாறு கேட்டிருந்தேன். இந்த ஆண்டிலாவது அந்தக் கிளை நிலையம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். மேலும், அமராவதி நகர் பகுதியிலே அதிகமான கால்நடைகள் உள்ளன. அங்கேயும் ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலமாகக் கேட்டு அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எனது அறிவிப்பிலேயே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, 50 புதிய கிளை நிலையங்கள் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது என்று தெரிவித்திருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்திலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதிபெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.*

திரு. ஆர். சின்னசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளிகளின் விடிவெள்ளி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின்கீழ் எனது சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருவதற்கு ஆணையிட்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2014 ஆகஸ்ட் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டோரும், இரு நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டோரும், தலித் மக்களின் தலைவர்கள் என்று சொல்லி அரசியல் நடத்தும் தலைவர்கள் மத்தியில், தமிழகத்திலுள்ள அனைத்து தனித் தொகுதிகளிலும் நாடாளுமன்ற வேட்பாளர்களை நிறுத்தி, சத்தமின்றி, சலனமின்றி, யுத்தமின்றி, இரத்தமின்றி நூறு சதவிகித வெற்றியைப் பெற்றுத் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரே அரசியல் தலைவரும், சிதம்பரம், நந்தனார் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அரசு ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் விதி எண் 110-ன்கீழ் அரசு தொழில்நுட்பக் கல்லூரி வழங்கி, ஒடுக்கப்பட்ட மாணாக்கர்களின் தலைவிதியை மாற்றிக் காட்டியவரும், வாழும் அம்பேத்கருமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பகுதி மக்களின் சார்பாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும், என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைப் பணிவோடு தெரிவித்து, காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியத்தில், நெய்வாசல் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் ஒன்றினை அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற நெய்வாசல் ஊராட்சியில், துறை ஆய்வு செய்து, அங்கே அரசு விதிகளுக்குட்பட்டு இருக்குமென்று சொன்னால், வாக்களித்த மக்களை மட்டுமல்லாமல் வாயில்லா ஜீவன்களையும் காத்து வருகின்ற எங்களுடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையினைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி), அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*